IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

CC.NO.291/2024

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | KAVIPRIYA |
| FATHER NAME | : | RAJA |
| VILLAGE | : | PERNAMBUT |
| OCCUPATION | : | |
| AGE | : | 18 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 01st day of July 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

1 முதல் 7 வரையிலான எதிரிகள் ஆஜர். 8 வது எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் 6 மற்றும் 7 வது எதிரிகள் எனது அம்மா மற்றும் அப்பா ஆவார்கள். மற்ற ஆஜர் எதிரிகளை தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீஸ் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் போலீஸ் விசாரணையில் அரசு மேல்நிலைப்பள்ளியில் 11 ம் வகுப்பு படித்து வருவதாகவும், பேர்ணாம்பட்டு கோட்டை காலனியை சேர்ந்த பன்னீர் மகன் இன்பமணி என்பவருக்கு அவரின் குடும்பத்தார் என்னை பெண் கேட்டு வந்ததாகவும், எனக்கு இன்னும் 18 வயது பூர்த்தி ஆகவில்லை என்றும், படிக்க வேண்டும் என்று கூறியதாகவும், 26.01.2024ம் தேதி இரவு 7 மணிக்கு எனக்கு 18 வயது முடியாததால் ஊருக்கு யாருக்கும் தெரியாமல் எங்கள் வீட்டிலேயே வைத்து எனது அப்பா, அம்மா, அத்தை மற்றும் இன்பமணியின் அம்மா, அப்பா, அக்கா முன்னிலையில் திருமணம் செய்து வைத்தார்கள் என்றும், திருமணம் வெளியில் தெரிந்தால் பிரச்சனை ஆகிவிடும் என்று எனது அம்மா தாலியை கழட்டிவிட்டார் என்றும், மறுநாள் எப்பொழுதும் போல் பள்ளிக்கு சென்றேன் என்றும், 31.01.2024ம் தேதி நான் பள்ளிக்கு சென்ற பிறகு பேர்ணாம்பட்டு விரிவு அலுவலர் CHILD LINE பணியாளர் பேர்ணாம்பட்டு காவல்நிலைய போலீசார் விசாரித்துவிட்டு சென்றார்கள் என்றும், 11.03.2024 அன்று விரிவு அலுவலர் என்னை விசாரணை செய்தார். நான் எனக்கு நடந்த குழந்தை திருமணம் பற்றி கூறியதாகவும், விரிவு அலுவலர் மேற்படி நபர்கள் மீது வழக்கு போட்டு விசாரித்ததாக

கூறிவிட்டு தற்பொழுது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

Sd/−R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.